பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 21 புதன்கிழமை 07.10.2020 கதிர் 202

## மினுவாங்கொடைப் பகுதியில் 8,000 பேர் தனிமைப்படுத்தலில்

மினுவாங்கொடைப் பகுதியைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் 80 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2

## பேச்சாளர் விவகாரம்:

# குழப்பத்தில் முடிந்தது கூட்டமைப்பின் கூட்டம்

## காலவரையறையின்றி ஒத்திவைத்தார் சம்பந்தன்



(ந.லோகதயாளன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரைத் தெரிவு செய்யும் நாடாளுமன்றக் கூட்டம் இணைக்கப்பாடு இன்மையால் அதன் தலைவர் இரா.சம்பந்தனால் காலவரைய றையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர், பேச்சாளர், பிரதம கொறடா ஆகிய பதவிகளைத் தீர்மானிக்கும் நோக்கில் இன்று கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. எனினும், பேச்சாளர், பிரதம கொறடா ஆகிய பதவிகளுக்கான தேர்வு இடம்பெறாமல் கால வரை யறையின்றி கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

2

## கொரோனாத் தொற்றுடன் தப்பிய வயோதிபர் கைது!



கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் வைத்தியசாலை யிலிருந்து தப்பித்துச் சென்ற வயோதி பர் கைதுசெய்யப்பட் டுள்ளார்.

கொழும்பு, கோட்டையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ள அவர் மீண்டும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

ராகம வைத்தியசாலையில் இருந்து நேற்றிரவு தப்பிச் சென்ற குறித்த நபர் மாலை கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

2

கொரோனாவின் இரண்டாவது அலையையடுத்து

## மூன்று மாகாணங்களில் அனைத்து மேலதிக வகுப்புகளுக்கும் தடை

கம்பஹா மாவட்டம், மினுவாங் கொடை ஆடைத்தொழிற்சாலைப் பணி யாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கொரோ னாத் தொற்று பல மாவட்டங்களிலும் பரவியுள்ளதையடுத்து மூன்று மாகா ணங்களில் மேலதிக வகுப்புக்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, மத்திய மாகாணத்தில் மறு அறிவித்தல் வரும் வரை அனைத்து மேலதிக வகுப்புக்களுக்கும் தடை விதிக் குமாறு மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்திலும் மீள் அறிவிப்பு வரை அனைத்து

2

## ஆடைத்தொழிற்சாலை கொத்தணியில் மேலும் 190 ஊழியர்களுக்குத் தொற்று

### இதுவரை 1,021 பேர் கொரோனாவால் பாதிப்பு

கம்பஹா மாவட்டம், மினு வாங்கொடையில் அமைந் துள்ள பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை கொத்தணி யில் மேலும் 190 ஊழியர்க ளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இராணுவத்தளபதி லெப்டி னன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மினுவாங்கொடை பிரண் டிக்ஸ்ஆடைத்தொழிற்சாலை கொத்தணியில் முன்னதாக 831ஊழியர்களுக்கு கொரோ னாத் தொற்று உறுதியாகியி ருந்தது.

இந்தநிலையில்,

2

## எந்தவொரு தகவலையும் மறைக்கவில்லை; நாட்டை முடக்க வேண்டிய அவசியம் இல்லை

### சுகாதார அமைச்சர் கூறுகின்றார்

தற்போதைய நிலைமையில் நாட்டை முடக்க வேண் டிய அவசியம் இல்லை. அத்துடன் கொரோனா வைரஸ் தொடர்பில் எந்தவொரு தகவலையும் அரசு மறைக்க வில்லை.

– இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன் னியாராச்சி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸவால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கை யிலேயே இந்த விடயத்தை சுகாதார அமைச்

2

## பிரபாகரன் மகன் பாலச்சந்திரன் சிறுவர் படையணித் தளபதியாம்!

### சரத் பொன்சேகாவின் கண்டுபிடிப்பு



கொழும்பு,ஒக்.07

விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனின் இளைய மகனை இலங்கை இராணுவத்தினர் கொல்லவில்லை என நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப் பினர் சரத் பொன்சேகா பிரபாகரன் மகன் பாலச்சந்திரன் சிறுவர் படையணியின் தள பதி எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2

## மஹிந்த 52 நாள் பிரதமரான போதும் பாதுகாப்புச் சபை கூட்டப்படவில்லை

### ஆணைக்குழு முன் ரணில் தகவல்

கொழும்பு,ஒக்.07

2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன பாதுகாப்புச் சபையைக் கூட்டவுமில்லை. தன்னை அழைக்கவு மில்லையென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர்பயங்கரவாதத்தாக்குதல்தொடர் பாக கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் நேற்று முதல் தடவையாக சாட்சி யமளிக்கும் போதே ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக நிறுத்தப் பட்டு, 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற ஆட்சி மாற்றம் வரையி லான காலப்பகுதியில் இடம்பெற்ற சம்ப வங்கள் தொடர்பாக தனக்கு ஒரு நூல் ஒன்றைக் கூட எழுத முடியுமென

2

## திட்டமிட்ட திகதிகளில் பரீட்சைகள் நடைபெறும்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக் 07

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆகியன திட்டமிட்ட திகதிகளில் நடைபெறும் எனவும், பரீட்சைகளை ஒத்திவைக்கப் போவதில்லை எனவும் கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதியும், உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 6ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

2

கம்பஹா மாவட்டத்தில்

## மேலும் 14 பொலிஸ் பிரிவுகளில் நடைமுறைக்கு வந்தது ஊரடங்கு

கொழும்பு, ஒக் 07

கம்பஹா மாவட்டத்தில் மேலும் 14 பொலிஸ் பிரிவுக ளில் பொலிஸ் ஊரடங்குச் சட் டம் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண அறிவித்துள்ளார்.

கம்பஹா, கிரின்டிவெல, தம்பே, பூகோட, வீரகுல, கணே முள்ள, வெலிவேரிய, மல் வத்முகிரிபிட்டிய, நிட்டம்புவ, மீரிகம, பல்லேவெல, யக்கல, கந்தான மற்றும் ஜா – எல ஆகிய பொலிஸ் பிரிவுகளி லேயே ஊரடங்கு நடைமு றைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்

2

## இந்தியர் வந்தனரா? இல்லை என மறுப்பு

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சா லைக்கு இந்தியர்கள் வந்தனர் எனக் கூறப்படும் தகவல்களில் எவ்வித உண்மை யும் இல்லை என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற் சாலையில் பணிபுரிந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது, எனினும், இதற்கான 'மூலத்தை'க் கண்டறிய முடியாமல் அதி காரிகள் திணறி வருகின்றனர்.

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## குழப்பத்தில் முடிந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்ற இன்றைய கூட்டத்தில் முதலில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் தேர்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோது அதன் தலைவராக இரா. சம்பந்தன் மீண்டும் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து இரண்டாவதாக கூட்டமைப்பின் பேச்சாளர் தேர்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதன்போது கூட்டமைப்பின் தற்போதைய பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன், நான் ஐந்து வருடங்களாகத் தொடர்ச்சியாகப் பேச்சாளர் பதவியை வகித்துள்ளேன். எனவே சுழற்சி முறையில் இருக்க வேண்டும் என எண்ணி இந்தப் பதவிக்கு சி.சிறிதரனின் பெயரை முன்மொழிகின்றேன் என்று தெரிவித்தார். இந்தத் தேர்வை இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. வழிமொழிந்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், பேச்சாளர் பதவியை ரெலோவுக்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன்போது, பேச்சாளர் பதவி கட்சிக்கு மட்டுமே உரியது. ஆனால் நாடாளுமன்ற ரீதியிலான பதவிகளில் ஒன்றான குழுக்களின் பிரதித் தலைவர் பதவி கடந்த ஆட்சியில் தனித்து ரெலோவிடமே வழங்கப்பட்டது. அப்போது பங்கிட எவரும் கோரவில்லை என்ற கருத்து தமிழரசுக் கட்சி எம்.பிக்கள் சார்பில் முன்வைக்கப்பட்டது. அத்துடன், பேச்சாளர் பதவி ரெலோவுக்கு வழங்க முடியாது எனவும் குறித்த எம்.பிக்களினால் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் சமரசம் செய்ய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முயன்றபோது ரெலோவுக்கு வழங்க முடியாது என உறுதியான கருத்து நிலவியதால் திகதி குறிப்பிடப்படாது கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் இன்றிரவு நடைபெறவுள்ளது.

## ஆடைத்தொழிற்சாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த ஆடைத்தொழிற்சாலை கொத்தணியில் இதுவரையில் கொரோனாத் தொற்று உறுதியான ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1,021 ஆக அதிகரித்துள்ளது.

## கொரோனாத் தொற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேலியகொடைப் பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய நபரே இவ்வாறு தப்பிச் சென்ற நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும், அவர் போதைப் பொருளை வாங்கவே தப்பிச் சென்றிருந் தார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

## மேலும் 14 பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை தொடக்கம் மினுவாங்கொடை, திவுலப்பிட்டிய மற்றும் வெயாங்கொடை பொலிஸ் பிரிவுகளில் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு கம்பஹா பொலிஸ் பிரிவிலும் நேற்று மாலை 6 மணி தொடக்கம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

## எந்தவொரு தகவலையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர் குறிப்பிட்டார்.இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

கொரோனா வைரஸ் தொடர்பில் அரசியலை மையப்படுத்தி அரசு முடிவுகளை எடுப்பதில்லை. மாறாக சுகாதார நிபுணர்களால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டே முடிவுகள் எடுக்கப்படுகின்றன. தற்போது நாட்டை முடக்கும் எண்ணம் இல்லை.

நேற்று மாத்திரம் 4 ஆயிரத்து 800 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொரோனா தொடர்பில் எந்தவொரு தகவல்களையும் அரசு மறைக்கவில்லை. நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதை அடிப்படையாகக் கொண்டே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப் படுகின்றது – என்றார்.

## மஹிந்த 52 நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் தெரிவித்தார்.

மேலும் 52 நாள் அரசாங்கத்தின் போது பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவும் பாதுகாப்பு பேரவையைக் கூட்டவில்லை எனத் தம்மிடம் தெரிவித்தார் என ரணில் கூறியுள்ளார்.

இதேவேளை நாடாளுமன்றத்தை கலைத்துவிடுவதாக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவ்வப்போது அச்சுறுத்தல் விடுத்தார் எனவும் முன்னாள் பிரதமர் தெரிவித்துள்ளார்.

# தனியார் கல்வி நிலையங்கள் வவுனியா மாவட்டத்தில் பூட்டு!

வவுனியா, ஒக்.07

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் நோய்த் தாக்கம் காரணமாக வவுனியா மாவட்டத்திலுள்ள அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களையும் உடன் மூடுமாறு மாவட்ட அரச அதிபர் எஸ்.எம்.சமன் பந்துலசேன உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கொரோனா நோய்த் தாக்கம் காரணமாக கம்பஹா மாவட்டத்திலுள்ள பல பொலிஸ் பிரிவுகளுக்கு ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டுள்ளதுடன் நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், பாடசாலை விடுமுறையையடுத்து வவுனியாவிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் காலை, மாலை என இரு நேரங்களிலும் வகுப்புக்கள் இடம்பெறுகின்றன.

கொரோனாத் தடுப்புக்கு இது ஆபத்தாக மாறக்கூடும் என்ற முன்னெச்சரிக்கையுடன் மறு அறிவித்தல் வரை வவுனியா மாவட்டத்திலுள்ள அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களையும் உடன் மூடுமாறு வவுனியா மாவட்ட அரச அதிபர் உத்தரவிட்டுள்ளார். (100)

## மினுவாங்கொடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேநேரம், நேற்று தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புகளை பேணியவர்களை கண்டறியும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தொற்றுக்குள்ளானோருடன் தொடர்புகளை பேணியவர்களையும் தனிமைப்படுத்துவதன் மூலமே சமூகத்தில் மேலும் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், மினுவாங்கொடை கொரோனா கொத்தணியை அண்மித்த பகுதிகளில் சுமார் 4,000 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனப் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்கள் தொடர்பாகவும் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன பொது சுகாதார பரிசோத கர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

## இந்தியர் வந்தனரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, குறித்த ஆடைத் தொழிற்சாலைக்கு அண்மையில் இந்தியாவில் இருந்து அதிகாரிகள் சிலர் வந்திருந்தனர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இதுகுறித்து இராணுவத் தளபதியிடம் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, இந்தியர் வந்தனர் என்று எவ்விதத் தகவல்களும் இல்லை என்று தெரிவித்தார்.

அத்துடன், கொவிட் தொற்று ஒன்று ஏற்பட்டுள்ளதால் எங்கு, யாரிடமிருந்து இந்த தொற்று பரவியது என்பதைக் கண்டறிவது சவால்மிக்கது என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தத் தொழிற்சாலையில் பணிபுரிந்த ஊழியர்கள் சிலர் கடந்த 21ஆம் திகதி முதலே இருமல், காய்ச்சல் உள்ளிட்ட நோய் அறிகுறிகளுக்காக விடுமுறையில் சென்றுள்ளனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

## மூன்று மாகாணங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிக வகுப்புக்களையும் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

மேலும், தென் மாகாணத்திலும் மறு அறிவித்தல் வரும் வரை அனைத்து மேலதிக வகுப்புக்களையும் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு தென் மாகாண ஆளுநர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காகவே இந்தச் செயல்முறை நடைமுறைக்குக் கொண்டு வரப் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பிரபாகரன் மகன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இராணுவத்தினர் பிஸ்கட் வழங்கிய பின்னர் பிரபாகரனின் மகனை கொன்றனர் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் குற்றம்சாட்டிய வேளை அதற்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பிரபாகரனின் மனைவி விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என தெரிவித்துள்ள சரத் பொன்சேகா அவரது மூத்த மகன் விடுதலைப்புலிகள் இயக்க கேணல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைவரின் இளைய மகன் சிறுவர்கள் படையணியின் தளபதி எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் பிழையான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதை தவிர்க்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## திட்டமிட்ட திகதிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது நாட்டில் மீண்டும் கொரோனா அச்சம் ஏற்பட் டுள்ள நிலையில் சில பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளன.

அதன்படி சுகாதாரத் துறையினரின் உதவியுடன் பரீட்சைகளை நடத்த ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

கம்பஹா மாவட்டத்தில் பரீட்சை எழுதும் மாணவர்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்படும். பரீட்சை நிலையங்கள் மிகக் கவனமாக கண்காணிக்கப்படும். அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு பரீட்சை எழுதச் செல்லும் மாணவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும். அத்துடன், வெளி மாவட்டங்களில் இருந்து கம்பஹா மாவட்டத்திற்கு பரீட்சை எழுத வரும் மாணவர்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கஸ்தூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொரோனா மூலம் எங்கிருந்து?

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் மையம் கொண்ட கொரோனா வைரஸ் முழு நாட்டையுமே ஓர் உலுப்பு உலுப்பத் தொடங்கி விட்டது என்பது திண்ணம்.

மினுவாங்கொடையிலிருந்து நாட்டின் நாலாபுறத்திலும் அது கால் பதித்துள்ளது.

இனி என்ன, நாட்டின்பாடு திண்டாட்டம்தான். ஊரடங்கு வாழ்வு தொடரும். முடக்கம் நீடிக்கும். ஏற்கனவே படுத்து விட்ட நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழும். வாங்கிய கடனுக்கான தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்குப் புதிய, புதிய கடன்களைப் பெற்று வந்த இலங்கை, அதற்கும் வழியில்லாமல் வகை சொல்ல முடியாத நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்படுவது தவிர்க்க முடியாததாகும்.

இப்படி எல்லாம் நெருக்கடி வருவதற்கான கொரோனாத் தொற்று – சம்பந்தப்பட்ட ஆடைத் தொழிற்சாலையை மையமாகக் கொண்டது – எங்ஙனம், எங்கிருந்து ஆரம்பித்தது என்பது தொடர்பில் அதிகாரிகள் இன்னும் வாயைத் திறக்கவில்லை மூலத்தைக் கண்டு பிடிப்பதற்கான ஓர் இழை கூடச் சிக்கவில்லை என்ற பாணியில்தான் அதிகாரிகள் தரப்பில் இருந்து பிரதிபலிப்புகள் வருகின்றன.

ஆனால், சில ஊடகத் தரப்புகள், விடயமறிந்த வட்டாரங்கள், வேறு விதமான தகவல்களை வெளியிடுகின்றன.

அவற்றை நோக்குவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட ஆடைத் தொழிற்சாலை தொடர்பிலான ஒரு சில விடயங்களை அவதானிப்பது முக்கியம்.

ஆடைத் தொழிற்சாலையின் உரிமையாளராக அதை வழிநடத்துபவர் – சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி – ஒரு முஸ்லிம் பிரமுகர்.

வழக்கமாக, இத்தகைய கொரோனாத் தொற்று ஆபத்துகள் முஸ்லிம் பிரமுகர்களை – வர்த்தகங்களை – ஒட்டி வெளிவருமானால் கதை வேறு. தெற்கில் இனவாதப் பிரசாரமும், இனவெறி உணர்வெழுச்சியும் வேறு விதமாக இருக்கும். ஆனால் இப்போது அப்படி ஒன்றும் நடக்கவேயில்லை என்பது அதிசயம்தான். இவ்விடயத்தில் அந்தப் பக்கத்தை – முஸ்லிம் பிரமுகருக்குரிய ஆடைத் தொழிற்சாலையை மையமாகக் கொண்டுதான் கொரோனா பரவுகின்றது என்ற விவகாரத்தை – பல தரப்புகளும் மிகக் கஷ்டப்பட்டு அமுக்கி, மூடி மறைத்துச் செயற்படுவது நல்லதுதான். ஆனால் அதற்கும் விசேட காரணம் உண்டு.

சம்பந்தப்பட்ட முஸ்லிம் பிரமுகர்கள் 2005 ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க பக்கத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்.

ஆனால், கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே, எந்தப் பதவியிலும் அச்சமயம் இயலாத கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவான 'வியத்ம' கட்டமைப்பில் முக்கிய நபராக இணைந்து அதன் பிரதான செயற்பாட்டாளராக இயங்கியவர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவின் வெற்றிக்கு பல்வேறு வகைகளில் அவர் அளித்த பங்களிப்பு தெற்கில் பலருக்கும் தெரிந்த இரகசியம். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நெருக்கமான நம்பிக்கைக்குரிய முஸ்லிம் பிரமுகர்களுள் இவரும் ஒருவர்.

இவரது ஆடைத் தொழிற்சாலைக்கு கொரோனா வைரஸ் வந்த முறைமை குறித்துப் பல்வேறு ஊகங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் இரண்டு முக்கியமானவை.

மேற்படி ஆடைத் தொழிற்சாலைக்குரிய மூலப் பொருள்களில் முக்கியமானது துணி. இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான பெருமளவு துணி இந்தியாவில் இருந்துதான் இறக்குமதி செய்யப்படுகின்றது. அப்படி இறக்குமதி செய்யப்படும் துணி வகைகள் தொற்று நீக்கத்துக்கு உட்படுத்தப்படுவதில்லை. அதனால் தொழிற்சாலைக்கு இந்தியாவிலிருந்து வந்த துணிப் பொதிகள் மூலம் கொரோனா வைரஸ் வந்திருக்கலாம் என்று ஊகம் தெரிவிக்கப்படுகின்றது. விஞ்ஞானபூர்வ விளக்கங்களின்படி அப்படி நடப்பதற்கு சாத்தியம் உண்டா, வாய்ப்பிருக்கின்றதா என்பவை எல்லாம் விசாரித்து, ஆராய்ந்து கண்டறியப்பட வேண்டியவை.

இன்னொரு முக்கிய தகவலையும் தென்னிலங்கை ஊடகம் ஒன்று கசிய விட்டிருக்கின்றது.

இத் தொழிற்சாலைக்கு மாதாந்தம் இயந்திரங்களுக்கு 'சேர்வீஸ்' செய்யவும் இயந்திரப் பழுதுகளைத் திருத்தவும் பொறியியலாளர்களும், திருத்துநர்களும் இந்தியாவில் இருந்துதான் வருகை தருவது வழக்கம்.

தொழிற்சாலையின் அவசரம் கருதி இந்தியாவிலிருந்து, மத்தள விமான நிலையம் ஊடாகத் தருவிக்கப்பட்ட இயந்திர நிபுணர்கள் சிலர், கால அவசரம் கருதி, குறிப்பிட்ட இரண்டு வாரத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படாமல், வெறும் பி.சி.ஆர். பரிசோதனையுடன் தொழிற்சாலைக்குள் பணிக்கு அனுமதிக்கப்பட்டனர் என்றும், அதன் மூலமே இந்தியாவில் இருந்த தொற்று தொழிற்சாலையை மையம் கொண்டு பரவ ஆரம்பித்தது என்றும் அந்த ஊடகம் கோடி காட்டியிருக்கின்றது.

இலங்கை அரசும், அதிகாரிகளும், உண்மைகளை மூடி மறைக்காமல் திறந்த மனதுடன் விடயங்களை அணுகி, வெளிப்படையாக விவரங்களை அம்பலப்படுத்தும் நேர்மைத்தனத்துடன் விரைந்து செயலாற்ற முன்வரவேண்டும். அப்படி முன்வந்தால் மட்டுமே இதில் நோய்த் தொற்று மூலம், அது எங்கிருந்து வந்தது என்பவை போன்ற உண்மைகளைக் கண்டுபிடிக்க முடியும். அரசியல் விருப்பு, வெறுப்புக்கு மாறாக அதனைக் கடமையாக முன்னெடுத்துச் செய்ய அதிகாரிகள் தயாரா?

# பட்டதாரி பயிலுநர்களுக்கு நிரந்தர நியமன ஏற்பாடு!




சாணக்கியன் அதிரடி

பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு வழங்கலின் போது மாறி வந்த அரசாங்கங்களினால் பட்டதாரி பயிலுநர்களாகவே நியமனம் வழங்கப்பட்டது.

அந்த வகையில் 2018 இல் வழங்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களுக்கான நியமனங்கள் நாடளாவிய ரீதியில் நிரந்தர நியமனமாக மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலையில் மட்டக்களப்பில் பல பட்டதாரிகளுக்கு அந்த நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் கவனிப்பாரற்று இருந்துள்ளனர்.

அவ்வகையான 29 பட்டதாரி பயிலுநர்கள் கிழக்கு மாகாணத்தின் பொதுச் சேவை ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையிலும் உள்வாங்கப்படாமல் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர்.

குறித்த அனைவருக்கும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் தொடர் முயற்சியின் பயனாக நிரந்தர நியமனம் வழங்கப்படுவதற்கான நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் கிடைத்துள்ளது.

இது தொடர்பாக இரா.சாணக்கியன் கருத்துத் தெரிவிக்கையில் –

பல வருடங்களாக பல்வேறுபட்ட கஷ்டங்களின் மத்தியில் கல்வி கற்று தொழில் இல்லாமல் புறக்கணிக்கப்படுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதுவும் இவர்களுடன் பட்டதாரி பயிலுநர் நியமனம் கிடைத்தவர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைத்துள்ள போது இவர்களுக்கு கிடைக்காமை என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

நானும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபையும் இணைந்து பொதுநிர்வாக அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொண்டு இவர்களுக்கான நியமனம் பெறுவதற்கான நேர்முகப்பரீட்சைக்கான அழைப்பு கடிதத்தை பெற்றுக் கொடுத்துள்ளோம்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை பொதுநிர்வாக அமைச்சில் நடைபெறவுள்ளது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா தொடர்பாக மக்கள் அச்சமடையத் தேவையில்லை!

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொரோனா தொற்றின் சமீபத்தைய பரவல் தொடர்பாக மக்கள் அச்சமடையத் தேவையில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொறுப்புடனும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சின் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக டுவிட்டரில் பதிவொன்றைப் பகிர்ந்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்த தொற்றைக் கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள், அரசாங்கம், பொலிஸார் மற்றும் முப்படையினர் செயற்பட்டு வருகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர் நாட்டுக்கு வரும் ஏற்பாடு நிறுத்தம்!

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடுகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அரசாங்கம் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக தனிமைப்படுத்தல் நிலையங்களில் போதிய இடவசதி இல்லையெனக் கூறப்படுகிறது.

இதனையடுத்து வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாட்டைத் தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கொரோனா பாதித்த பெண் பயணம் செய்த பஸ்ஸின் சாரதி, நடத்துநர் தனிமைப்படுத்தல்!

பருத்தித்துறை சாலையில் பணியாற்றுவோர்



மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் புங்குடுதீவைச் சேர்ந்த பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் அவர் புத்தளத்திலிருந்து கொடிகாமம் வரை பயணித்த பருத்தித்துறை சாலைக்குச் சொந்தமான பஸ்ஸின் சாரதி, நடத்துநர் இருவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

அத்துடன், பருத்தித்துறை பஸ்ஸில் பயணித்தவர்கள் சமூகப்பொறுப்புடன் தம்மையும் சமூகத்தையும் காக்க முன்வந்து இனங்காட்டுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எனவே அந்த பஸ்ஸில் பயணித்தோர் உடன் தன்னார்வமாக உங்களை வெளிப்படுத்தி வடமாகாண சுகாதார திணைக்களத்தின் 021222 6666 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# எடப்பாடி பழனிசாமிதான் முதலமைச்சர் வேட்பாளர்

## அ.தி.மு.க. சார்பில் ஓ.பி. பன்னீர்ச்செல்வம் அறிவிப்பு

2021 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அ.தி.மு.க. முதலமைச்சர் வேட்பாளராக எடப்பாடி பழனிசாமி அறிவிக்கப்பட்டுள்ளார்.

முதலமைச்சர் வேட்பாளர் மற்றும் அ.தி.மு.க. வழிகாட்டுதல் குழுவை தேர்வு செய்வதற்கான ஆலோசனை இன்று அதிகாலை மூன்றரை மணி வரை நீடித்தது. முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் இல்லங்களில் நடைபெற்ற ஆலோசனைகளை தொடர்ந்து இன்று காலை பத்து மணிக்கு நல்ல செய்தி வரும் என்று அ.தி.மு.க. துணை ஒருங்கிணைப்பாளர் வைத்திலிங்கம் கூறினார். மேலும் காலையில் இருந்தே அ.தி.மு.க. தொண்டர்கள் அக்கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு வர ஆரம்பித்தனர்.

காலை ஒன்பது மணி அளவில் மூத்த அமைச்சர்கள், அ.தி.மு.கழக எம்.பிக்கள், எம்.எல்.ஏக்களும் அ.தி.மு.க. தலைமையகம் வந்தனர். அதே நேரத்தில் துணை முதலமைச்சர் ஓ.பி. பன்னீர்ச்செல்வம் (ஓபிஎஸ்) தனது வீட்டில் இருந்து புறப்பட்டு அ.தி.மு.க. தலைமையகம் வந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தொடர்ந்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியும் தனது வீட்டில் இருந்து அ.தி.மு.க. தலைமையகம் புறப்பட்டார். வழிநெடுகிலும் அவருக்கு அ.தி.மு.க. தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



அ.தி.மு.க. தலைமையகம் வந்த பிறகு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓபிஎஸ் இணைந்து செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, அ.தி.மு.க. வழிநடத்த 11 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறி அவர்களின் பெயர்களை வெளியிட்டார்.

பின்னர் பேசிய துணை முதலமைச்சரும் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளருமான ஓபிஎஸ், 2021ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலுக்கான முதலமைச்சர் வேட்பாளராக எடப்பாடி பழனிசாமியை மகிழ்ச்சியுடன் அறிவிப்பதாக கூறினார்.

முதலமைச்சர் வேட்பாளராக எடப்பாடி பழனிசாமி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து அ.தி.மு.க. தலைமையகம் மற்றும் வெளியே கூடியிருந்தவர்கள் உற்சாக முழக்கமிட்டனர். முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி துணை முதலமைச்சர் ஓபிஎஸ்ஸுக்கு சால்வை அணிவித்தார். இதே போல் துணை முதலமைச்சர் ஓபிஎஸ், முதலமைச்சர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட எடப்பாடி பழனிசாமிக்கு சால்வை மற்றும் பூங்கொத்து கொடுத்து வாழ்த்தினார்.

தொடர்ந்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓபிஎஸ் மற்றும் அமைச்சர்கள் ஜெயலலிதா மற்றும் எம்ஜிஆர் நினைவிடங்களில் மரியாதை செலுத்தினர்.

## அ.தி.மு.க. வழிகாட்டல் குழுவின் பெயர் விவரம்!

அ.தி.மு.கவின் வழிகாட்டுதல் குழுவின் பெயர் பட்டியல் இன்று (புதன்கிழமை) அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

அந்த பெயர் பட்டியலில் 11 பேர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி :

**எஸ்.பி.வேலுமணி**
**தங்கமணி**
**டி.ஜெயக்குமார்**
**திண்டுக்கல் சீனிவாசன்**
**சிவி சண்முகம்**
**ஜேசிடி பிரபாகரன்**
**காமராஜ்**
**மனோஜ் பாண்டியன்**
**மோகன்**
**கோபாலகிருஷ்ணன்**

டி.மாணிக்கம் ஆகியோர் பெயர்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சசிகலா வெளியே வந்தாலும் அ.தி.மு.கவுக்கு சிக்கல் வராது!



அ.தி.மு.க.வில் குழப்பம் என்பதே இல்லை என்றும் அனைத்தும் பேசி தீர்த்துக்கொள்ளக்கூடிய கருத்துகள் தான் என்றுத் தமிழக அமைச்சர் ஓ.எஸ். மணியன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த ஓ.எஸ்.மணியன் –

அ.தி.மு.க.வில் குழப்பம் என்பதே இல்லை. ஜெயலலிதா இல்லாமல் தேர்தலை சந்திக்கவுள்ள சூழலில், பேசி தீர்த்துக வேண்டிய சில கருத்துகள் இருக்குமே ஒளிய இதில் குழப்பம் ஒன்றுமே இல்லை.

அம்மாவின் மறைவிற்கு பிறகு பல சோதனைகளை வெற்றிகரமாக எதிர்கொண்டிருக்கிறோம், ஆட்சியை வெற்றிகரமாக நடத்திக்காட்டியிருக்கிறோம்.

இயற்கை இடர்பாடுகளை சிறப்பாக கையாண்டு பொதுமக்களின் நன்மதிப்பை பெற்றிருக்கிறோம், அதனால் குழப்பம் அ.தி.மு.கவில் என்பதே இல்லை.

மேலும் முதல்வர் வேட்பாளர் குழப்பத்தால் அமைச்சர்கள் மக்கள் பணியாற்றவில்லை என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு உண்மையல்ல. தற்போதும் கூட அனைத்து அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் சிறப்பாகப் பணியாற்றிவருகிறோம்.

சசிகலா வந்தபிறகு அதி.மு.க.வுக்கு சிக்கல்வருமா என்று எதிர்பார்க்கிறார்கள், ஆனால் அந்த எதிர்பார்ப்பு வெற்றி பெறாது. – என தெரிவித்தார்.

## ஜம்மு – காஷ்மீரில் துப்பாக்கிச் சூடு!

### 3 பயங்கரவாதிகள் பலி



ஜம்மு – காஷ்மீரில் நடைபெற்றுவரும் துப்பாக்கிச் சண்டையில் 3 பயங்கரவாதிகள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சோபியானின் சுகான் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய பாதுகாப்புப் படையினர் இன்று (புதன்கிழமை) காலை தேடுதல் வேட்டை நடத்தினர்.

இதன்போது அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே துப்பாக்கி சண்டை மூண்டது.

இதில் காலையில் 2 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில், மேலும் ஒருவர் மதியம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

## இந்திய எல்லை விவகாரம்: சீனாவுக்கு அமெ. கண்டனம்!

இந்திய எல்லைப் பகுதியில் சீன இராணுவத்தின் அத்துமீறல் நடவடிக்கைகளுக்காக அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

டோக்கியோவில் நடைபெற்ற குவாட் குழு நாடுகளின் உச்சி மாநாட்டில் பேசிய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மேற்படி கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சீனாவை ஒட்டியுள்ள லடாக் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள இந்திய இராணுவ வீரர்களுக்கு அமெரிக்காவின் சிக் சாயர் என்ற நவீன தாக்குதல் துப்பாக்கியை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக, அமெரிக்காவிடம் இருந்து சுமார் 72 ஆயிரத்து 500 சிக் சாயரா தாக்குதல் துப்பாக்கிகளை விரைவான முறையில் கொள்முதல் செய்ய அண்மையில் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## தாய்மொழிக் கல்விபெறுதல் குழந்தைகளுக்கு அவசியம்!

### உச்சநீதிமன்று அறிவிப்பு

குழந்தைகள் கல்வி தொடர்பான அடிப்படை அறிவைப் பெறவேண்டுமானால் தாய்மொழியில் கல்வியை ஆரம்பிக்க வேண்டியது அவசியம் என உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தெரிவித்துள்ளார்.

அடுத்த கல்வியாண்டு முதல் தரம் ஒன்று முதல் 6 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழியில் பயிற்றுவிப்பது கட்டாயம் என ஆந்திர அரசு கடந்த நவம்பரில் உத்தரவு பிறப்பித்தது. இதனை ஆந்திர உயர்நீதிமன்றம் இரத்து செய்துள்ள நிலையில் இதனை எதிர்த்து ஆந்திர அரசு மேன்முறையீடு செய்துள்ளது.

அந்த மேன்முறையீடை விசாரணைக்கு எடுத்துகொண்ட உச்சநீதிமன்றம் மேற்படி அறிவித்துள்ளது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்ஏ போப்டே ஆரம்பக் கல்வியை எந்த மொழியில் வழங்குவது என்பதில் பெரிய மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன எனவும் குறிப்பிட்டு வழக்கை அடுத்த வாரத்திற்கு தள்ளிவைத்துள்ளார்.

## வைத்தியசாலையிலிருந்து விரைவில் நடிகர் விஜயகாந்த் வெளியேறுவார்!

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் விரைவில் வைத்தியசாலையில் இருந்து வெளியேறுவார் என வைத்தியசாலை அறிக்கை வெளியிட்டுள்ளது.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மற்றும் அவரது மனைவி பிரேமலதா இருவரும், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று குணமடைந்த நிலையில் கடந்த 2 ஆம் திகதி வீடு திரும்பினர்.

தொடர்ந்து, வீட்டுக் கண்காணிப்பில் இருந்து வந்த விஜயகாந்துக்கு, நேற்று செவ்வாய்க்கிழமை மாலை உடல்நலக் குறைவு ஏற்பட்டமையை அடுத்து, மீண்டும் அவர் மியாட் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், விஜயகாந்த் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், அவர் விரைவில் குணமடைந்து வெளியேறுவார் எனவும் மியாட் வைத்தியசாலை அறிக்கை வெளியிட்டுள்ளது.

# அலெக்ஸி நவால்னிக்கு விசம் வைக்கப்பட்டமை விசாரணை கோருகின்றன பல்வேறு நாடுகளும்!



அலெக்ஸி நவால்னிக்கு விசம் வைக்கப்பட்டமை தொடர்பில் முழுமையான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என ஜேர்மனி உள்ளிட்ட கூட்டணி நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

ர;ய மண்ணில் அந்நாட்டைச் சேர்ந்த குடிமகனுக்கு எவ்வாறு இது நடத்தப்பட்டது என்பதை ர;யா விளக்க வேண்டும். இது தொடர்பாக முழு விசாரணையை ரஷ்யா நடத்த வேண்டும் என ஜேர்மனி வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளும் அலெக்ஸி நவால்னிக்கு விம் வைக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்று கூறியுள்ளன.

ரஷ்ய ஜனாதிபதியையும், அவரது அரசின் ஊழலையும் கடுமையாக விமர்சித்து வந்தவர் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி.

ரஷ்ய ஜனாதிபதி தேர்தலின்போதும் தொடர் பிரசாரங்களில் ஈடுபட்ட அலெக்ஸி நவால்னிக்கு இளைஞர்கள் மத்தியில் பரவலான வரவேற்பு இருந்தது.

எனினும், ரஸ்ய அரசாங்கம் அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தி, அவரைத் தேர்தலில் போட்டியிட முடியாமல் செய்தது. இருப்பினும் அலெக்ஸி நவால்னி தொடர்ந்தும் அரசை விமர்சித்து வருகிறார்.

இந்த நிலையில் கடந்த மாதம் டாம்ஸ்க் நகரிலிருந்து மொஸ்கோவுக்கு விமானத்தில் செல்லும்போது அலெக்ஸி மயங்கி விழுந்தார். இதனைத் தொடர்ந்து அவர் ஜேர்மனியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

அலெக்ஸி நவால்னிக்கு விம் வைக்கப்பட்டமையை ஜேர்மனி அரசாங்கம் உறுதிப்படுத்தியதுஎன்பதுகுறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் தேர்தலுக்கு பின்னரே தடுப்பூசி அனுமதி?




அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னரே தடுப்பூசிக்கு அனுமதி வழங்கப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் கொரோனா வைரசிற்கு எதிரான தடுப்பூசியை உருவாக்குவதில் அங்குள்ள நிறுவனங்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாகவே தடுப்பூசியை பயன்பாட்டுக்கு கொண்டுவந்து விடவேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விரும்புகிறார்.

இதற்காக தடுப்பூசிக்கு அவசரகால பயன்பாடுத் திட்டத்தின்படி அனுமதி வழங்கவும் தயார் என அரசாங்கம் அறிவித்தது.

அமெரிக்காவின் மாடர்னா நிறுவனம் உருவாக்கி உள்ள தடுப்பூசி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இதனால் இந்தத் தடுப்பூசி விரைவில் பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே தடுப்பூசிக்கு அவசர கால பயன்பாட்டை அங்கீகரிப்பதற்கு குறைந்தது 2 மாத பாதுகாப்பு தரவுகளை வழங்கும்படி அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம், தடுப்பூசியை உருவாக்கும் நிறுவனங்களிடம் தெரிவித்துள்ளது.

இதனால் அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக தடுப்பூசி பயன்பாட்டுக்கு வர வாய்ப்பு இல்லை எனவும், தேர்தலுக்கு பிறகே தடுப்பூசிக்கு அவசரகால பயன்பாட்டு அனுமதி வழங்கப்படும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## பாரிய ஆர்ப்பாட்டங்களை அடுத்து கிரிகிஸ்தான் தேர்தல் முடிவு ரத்து!



பாரிய ஆர்ப்பாட்டங்களை அடுத்து கிரிகிஸ்தான் தேர்தல் முடிவை அந்நாட்டு தேர்தல் ஆணையகம் இரத்துச் செய்துள்ளது.

குறிப்பிட்ட அரசியல் சக்திகள் சட்டவிரோதமான முறையில் அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்கின்றன என ஜனாதிபதி சூரொன்பாய் ஜீபெகொவ் குற்றம் சுமத்தியுள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட 16 கட்சிகளில் நான்கு மாத்திரமே நாடாளுமன்றம் நுழைவதற்குத் தேவையான 7 வீத வாக்கு எல்லையைப் பெற்றுள்ளன. அதில் மூன்று ஜனாதிபதிக்கு நெருக்கமான கட்சிகளாகும்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை தலைநகர் பிஷ்கக்கில் உள்ள அலா து சதுக்கத்தில் ஒன்றுதிரண்ட சுமார் 5000 பேர் தேர்தல் முடிவை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டிருந்தது.

## உலகில் மிகப்பெரிய செயற்கை நீரூற்று டுபாயில் திறக்கப்படுகிறது!



உலகின் மிகப்பெரிய செயற்கை நீரூற்று டுபாயில் திறந்து வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி இந்த செயற்கை நீரூற்று திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

டுபாய் நகரின் பால்ம் ஜுமைரா பகுதியில் திறக்கப்படவுள்ள குறித்த நீரூற்று 'த பாய்ண்ட்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இந்த புதிய நீரூற்றானது கடல் பகுதியில் 14 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இதிலிருந்து வெளியேறும் தண்ணீர் 105 மீற்றர் உயரம் வரை செல்லும் எனவும் 3000 எல்.இ.டி. விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளமையால் பல வண்ணத்தில் தண்ணீர் பீய்ச்சி அடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூமியின் வெளிப்புற சுற்றுப் பாதையை சிறிய கோள் ஒன்று மோத வாய்ப்பு!

போயிங் 747 விமானம் அளவிலான சிறிய கோள் ஒன்று, இன்று (புதன்கிழமை) பூமியின் வெளிப்புற சுற்றுப்பாதையுடன் மோத வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாசாவின் சிறுகோள் கண்காணிப்பு மையம் இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் கண்டுபிடிக்கப்பட்ட 2020 ஆர்.கே. 2 என்ற சிறு கோள், பூமியில் இருந்து 23 லட்சத்து 80 ஆயிரம் மைல் தொலைவில் சுற்றுப்பாதையை கடக்கும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

சுமார் 118 முதல் 265 அடி அகலம் கொண்ட இந்த சிறு கோள் வினாடிக்கு ஆறரை கிலோ மீற்றர் என்ற வேகத்தில் பயணிப்பதாகவும், பூமியைக் கடந்து அதிக தூரம் வரை செல்லக்கூடும் எனவும் நாசா மதிப்பிட்டுள்ளது.

## நைல்நதியில் கட்டப்பட்ட அணைக்கு மேலாக விமானங்கள் பறக்கத் தடை!



நைல் நதியில் கட்டப்பட்டிருக்கும் சர்ச்சைக்குரிய பாரிய அணைக்கு மேலாக விமானங்கள் பறப்பதற்கு எத்தியோப்பியா தடை விதித்துள்ளது.

4.8 பில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த அணை நாட்டின் பொருளாதாரத்திற்கு தீர்க்கமானதாக எத்தியோப்பியா கருதுகிறது.

இந்த அணை தொடர்பில் எகிப்து மற்றும் சூடான் அதிருப்தியில் உள்ளன. இதனால் தமது நாட்டின் நைல் நதி நீரோட்டத்தில் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று இந்த நாடுகள் கவலை அடைந்துள்ளன.

இந்த அணையைப் பாதுகாக்கத் தயாராக இருப்பதாக எதியோப்பிய விமானப்படை ஒரு வாரத்திற்கு முன் எச்சரிக்கை விடுத்திருந்தது.

'அணையை பாதுகாப்பதற்காக அனைத்து விமானங்களுக்கும் தடை விதிக்கப்படுகின்றன' எனஎத்தியோப்பிய சிவில் விமானப்போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் வெசன்யெலே ஹனெக்னோ தெரிவித்துள்ளார்.

## மாலைதீவு முன்னாள் துணை ஜனாதிபதிக்கு 20 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை!



ஊழல், பண மோசடி மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்ட மாலைதீவு முன்னாள் துணை ஜனாதிபதி அஹமது அதீப்புக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீனுக்கு நெருக்கமானவராக இருந்த அதீப், அவரை படுகொலை செய்ய முயன்றார் என 2015 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் மாலைதீவு குற்றவியல் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில் அதீப்புக்கு இரண்டு மில்லியன் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# போலித் தமிழ்த் தேசிய எடுபிடிகளிடம் இருந்து மக்களைக் காக்க ஊடகங்கள் உதவவேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் உருக்கமான வேண்டுகோள்



கொழும்பு, ஒக்.07

போலித் தமிழ்த் தேசியத்தின் எடுபிடிகளாக இருந்து, மக்களின் அவலங்களுக்குத் துணைபோகாமல், எமது மக்களின் நலன்சார்ந்து செயற்படுவதற்கு அனைத்துத் தமிழ் ஊடகங்களும் முன்வர வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்கிழமை) நிதித் திருத்தக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி சட்டத்தின் கீழான கட்டளைகள் தொடர்பிலான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்த உரையில், அண்மைய நாள்களாகத் தமிழ் ஊடகங்கள் சிலவற்றில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திலீபன் தொடர்பாக வெளிப்படுத்திய கருத்துத் தொடர்பாக பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், இந்த விடயம் தொடர்பாகவும் அவர் தெளிவுபடுத்தினார்.

அதாவது, உண்மை வரலாறு தெரிந்த வர்களும், தன்னை நன்கறிந்த மக்களும், முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர்களும் தான் வெளியிட்ட கருத்துத் தொடர்பான உண்மைத் தன்மையை நன்கு அறிவார்கள் என அவர் குறிப்பிட்டார்.

உண்மை வரலாறு தெரிந்த - திலீபனின் கொலை வெறியால் பாதிக்கப்பட்ட - அப்போது தப்பியோடிவிட்டு தற்போது திலீபன் தொடர்பில் வஞ்சகப் புகழ்ச்சி பாடிக் கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல் தரப்பினர், தனது இந்தக் கருத்துக்கு எதிராக வாயே திறக்காமல் இருப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

மேலும், அண்மையில் புங்குடுதீவில் கொலை செய்யப்பட்ட புசகர், பசுவதைக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்த நிலையில் கொலைசெய்யப்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் வெளியாகிய போதிலும், இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளில் வேறொரு காரணம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையை சுட்டிக் காட்டிய அமைச்சர், அந்த ஊடகங்களில் செய்திகள் இனங்களுக்கிடையிலான முரண்பாட்டுக்கு வித்திடும் வகையில் அமைந்துள்ளதாவும் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன், மனிதப் படுகொலைகளைத் தூண்டியும், அதனை ஊக்குவித்தும், வரவேற்றும் வந்துள்ள தமிழர் தரப்பின் போலித் தேசிய அரசியல் கூட்டத்துக்கும், இந்தக் கூட்டத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்ற சில தமிழ் ஊடக வர்த்தகச் சந்தைகளுக்கும் தான் உண்மைகளை சொல்கின்றபோது கசப்பு ஏற்படுவது இயல்பு எனவும் குறிப்பிட்டார்.

மக்களின் அவலங்களுக்கு எதிராகவும், அந்த அவலங்களை விளைவிப்போருக்கு எதிராகவும் போராட வேண்டிய அதேநேரம், அந்த அவலங்களிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கும், அத்தகைய அவலங்கள் மீள ஏற்படாமல் இருப்பதற்கான செயற்பாடுகள் தன்னால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்தார்.

எனவே, போலித் தமிழ்த் தேசியத்தின் எடுபிடிகளாக இருந்து எமது மக்களின் அவலங்களுக்கு துணைபோகாமல், எமது மக்களின் நலன்சார்ந்து செயற்படுவதற்கு இப்போதாவது முன்வர வேண்டும் என்ற கோரிக்கையையே தன்னால் முன்வைக்க முடியுமாக இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மனைவி, பிள்ளையைக் கொன்ற கணவன் பின் தானும் தற்கொலை

## லண்டனில் தமிழ்க் குடும்பத்தின் பரிதாபம்





லண்டனின் Brentford என்ற பிரதேசத்தில் ஒருவர் தனது மனைவியையும், பிள்ளையையும் கொலை செய்துவிட்டு, தானும் தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பூர்ணா காமேஸ்வரி சிவராஜா என்ற 36 வயது பெண்ணும், கைலாஸ் குகராஜ் என்ற 3வயது பிள்ளையுமே இவ்வாறு கொல்லப்பட்டிருந்தார்கள்.

இவர்களை கொலை செய்தவர் என்று நம்பப்படும் குகராஜ் சிதம்பரநாதன் என்ற 42 வயது நபர் தன்னைத் தானே குத்தித் தற்கொலை செய்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக் காலமாக குடும்ப உறுப்பினர்களுக்கு எதிரான படுகொலைகள் ஐரோப்பாவின் பல இடங்களிலும் அதிகரித்து வருவதும், மன அழுத்தம் காரணமாக நிறையப் படுகொலைகள் குடும்ப உறுப்பினர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக பிரித்தானியாவில் குடும்பங்கள் இடையிலான சுமார் 100 இற்கும் அதிகமான சம்பவங்கள் இந்த வருடத்தில் இடம்பெற்றுள்ளன எனக் காவல் துறையினர் குறிப்பிட்டுள்ளார்கள்.

# கொரோனாத் தொற்றாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு மறுப்பு!

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட சிலர் சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு வைத்தியசாலைகளுக்கு வர மறுப்புத் தெரிவிக்கின்றனர் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் -

கம்பஹா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அநேகமானோர் பதிவான நிலையில் சுகாதார அமைச்சால் கம்பஹா மாவட்டத்தினுள் பி.சீ.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது கொரோனாத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டவர்களைச் சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்காக சுகாதார அமைச்சால் அவர்களின் வீடுகளுக்கு நோயாளர் காவு வண்டிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் சிலர் சிகிச்சை மத்திய நிலையங்களுக்குச் செல்கின்றமையை நிராகரிக்கின்றனர்.

இலங்கை மக்களின் சுகாதாரப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு சுகாதார அமைச்சின் ஊடாக வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் நோயாளர் காவு வண்டிகள் ஊடாக சிகிச்சை மத்திய நிலையங்களுக்குச் செல்லுமாறு தொற்றுக்குள்ளான பொது மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

சிகிச்சைக்காகச் செல்லாமல் புறக்கணித்தல் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் குற்றம் என்பதால், அவ்வாறு செய்யும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பிற்போடப்பட்டன!

கொழும்பு, ஒக்.07

கிழக்குப் பல்கலைக்கழக 2018 - 2019 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக் கழக கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி ஜெ. கென்னடியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் -

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட 2018 - 2019 கல்வி யாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 2020. 10.12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட விருந்த நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று அச்சம் காரணமாக கிழக்குப் பல்கலைக் கழக 2018 - 2019 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் பிற்போடப்பட்டுள்ளன.

இவர்களது கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம் தொடர்பான மீள் அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் பெண்ணுக்குக் கொரோனாத் தாக்கு 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தலில்!

யாழ்ப்பாணம் - புங்குடுதீவில் பெண்ணொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதன் காரணமாக 3 ஆயிரத்து 915 பேர் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

மேலும் அந்தப் பகுதியில் முழுமையான முடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ்ப்பாண மாவட்ட கொரோனா ஒழிப்பு செயலணி கூட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர் -

எங்களைப் பொறுத்தவரைக்கும் புங்குடுதீவில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளமையின் காரணமாக ஆயிரத்து 212 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 915 பேர் கட்டாய சுயதனிமைப் படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த சந்தர்ப்பத்திலே யாழ்ப்பாண மாவட்டம் தற்போதைய அனர்த்தத்தை மிகவும் சிக்கலான நிலைமையில் எதிர்கொள்ளும் பாரிய ஓர் அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஆகவே அபாயகரமான சூழல் என்று நாங்கள் தற்பொழுது கருதப்பட வேண்டிய புங்குடுதீவு பகுதி முற்று முழுதாக முடக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் ஏனைய பகுதிகளிலும் சில சில செயற்பாடுகளை அரசாங்கத்தினுடைய அறிவுறுத்தலின் பிரகாரம் முடக்கி இருக்கின்றோம். அல்லது தற்காலிகமாக நிறுத்தி இருக்கின்றோம்.

இனிவரும் காலங்களில் சுகாதார நடைமுறைகளைக் கட்டாயமாகப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் பஸ்ஸில் பயணிக்கும்போது ஆசன மட்டத்துக்கு அமைவாகப் பயணிகளைக் கொண்டு செல்வதற்கு நாங்கள் அறிவுறுத்தியுள்ளோம் .

பஸ்களையும் முறையாகத் தொற்று நீக்கி சேவையில் ஈடுபடுத்துமாறும் கோரியுள்ளோம். ஆகவே, பொதுமக்கள் இந்த நிலைமையை அனுசரித்து நடந்தால் எங்களுடைய தொற்று நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம். தொற்று ஏற்படுவதை தடுத்து நிறுத்தலாம். - என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.10.2020 இல் வெளியிடப்பெற்றது.